Registered as a News Paper in Sri Lanka | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத வருட ஆனி மீ 8 ஆம் உ | வெள்ளிக்கிழமை | (22 - 06 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஜ் 28 | ஓசை 124

## சிறிலங்கா இராணுவம் திருக்குர்ரானை எரித்தது

(நாவலடி)

முஸ்லிம்கள் செறிவாக வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாவலடி சந்தியில் சிங்கள இராணுவத்தினர் ஒரு பள்ளிவாசலை உடைத்ததுடன் பள்ளிவாசலின் உள்ளே இருநது திருக்குர்ரான் புத்தகங்களை தீயிட்டுக் கொழுத்தியுமுள்ளனர்.

மேலும் அப்பகுதியில் அட்டகாசம் செய்த சிங்கள இராணுவத்தினர் அகப்பட்ட முஸ்லிம் பொதுமக்களைத் தாக்கியும் உள்ளனர் கடைகள் சூறையாடப்பட்டுள்ளதாகவும் நாவலடி பிரதேசத்தில் இருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் மட்டக்களப்பு ஓட்டமாவடி பகுதியில் பள்ளிவாசல் ஒன்று உடைக்கப்பட்டதுடன் கடைகள் பலவும் சிங்கள இராணுவத்தால் உடைத்தெறியப்பட்டுள்ளது. (அ)

## திருமலையில் தமிழர் படுகொலை இராணுவம்காடையர்வெறியாட்டம்

(திருக்கோணமலை)

திருமலை நகர்பகுதியில் 160 பேருக்கு மேற்பட்ட தமிழர் சிறிலங்கா இராணுவத்தினராலும், சிங்களக் காடையர்களினாலும் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள், இக்கோரக் கொலைகள் கடந்த 16ஆம் திகதி முதல் அடுத்துவந்த சில தினங்கள் வரை நடைபெற்றது. அத்தோடு தமிழரின் வீடுகள், கடைகள் என்பனவும் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

மேலும் அநுராதபுரச் சந்தியில் தியாகிகளின் நினைவாக ஸ்தாபிக்கப்பட்ட தூபிகளையும் சிறிலங்கா இராணுவம் உடைத்துள்ளது.

நிலாவெளியில் நேற்று முன்தினமிரவு ஹெலி தாக்குதலால் இரண்டு வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன. (4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு ஸ்ரென் துப்பாக்கிசிக்கியது

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபாவும், சகாக்களும் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் மேற்கொண்ட நடவடிக்கையின்போது சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்திற்குஅருகே ரயில் பாதையில் கேட்பாரற்றுக் கிடந்த ஸ்ரென் துப்பாக்கிஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் 22 குண்டுகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. கையுறை ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

## ஈரானில் நில நடுக்கம்; 2000 பேருக்குமேல் மரணம்

(தெகிரான்)

ஈரானின் வடமேற்கு பாகத்தில் ஏற்பட்ட பெரும் பூகம்பம் ஒன்றினால் 2000 பேருக்கு மேற்பட்டவர்கள் இறந்து போனதாகவும், நூற்றுக் கணக்கானவர்களைக் காணவில்லை எனவும், 3000த்திற்கு மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளதாகவும் நேற்று ஈரானின் செய்திஸ்தாபனமான இர்னா அறிவித்தது.

இப் பூகம்பத்தால் பல மணல் மேடுகள் சரிந்து வீழ்ந்ததாகவும், சில நகரங்கள் முற்றாக அழிந்துவிட்டதாகவும் போக்குவரத்து முற்றாகப் பாதிப்படைந்துள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. போக்குவரத்து முற்றாகச் சேதமடைந்ததால் மீட்புப்பணிகள் பாதிப்படைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் நில அதிர்வின் தாக்கம் அரசசபைகளிலும் உணரப்பட்டது. (4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரிலுள்ள கஜுவத்தை இராணுவ முகாம் புலிகளிடம்!

## திருக்கோணமலை, கல்முனையிலும் கடும் சண்டை தொடர்கிறது!

(நமது நிருபர்கள்)

**மன்னாரில் கஜுவத்தை (சொண்டச்சி) என்ற இடத்தில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவமுகாமை விடுதலைப்புலிகள் நேற்றுக் கைப்பற்றினர். இம்முகாமில் இருந்த இராணுவத்தினர் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை...

புரச் சந்தியிலும் கல்முனையிலும் சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## சிற்றூரவைக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சிற்றூரவை வட்ட அவை உறுப்பினர்களுக்குத் தற்போதைய சூழ்நிலை பற்றிய விளக்கமளிக்கும்முகமாக வலிகாமத்திலும், தென்மராட்சியிலும் இரண்டு கூட்டங்கள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக் காலை மானிப்பாய் பகுதியில் விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 1200 பேர் இறந்ததாக

## திருச்சிரரம் பேட்டையில் இன்று அடக்கம்

(சென்னை)

இறந்த 16 ஈ.பி ஆர்.எல்.எவ் உறுப்பினர்களது உடல்கள் சென்னை அரசினர் கோட்டம் பழைய கவர்னர் மாளிகை முகப்பில் பொது மக்கள் பார்வைக்காக இன்று காலை 9 00 மணி முதல் வைக்கப்படும்.

இன்று மாலை 3.00 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு திருச்சிராம் பேட்டை மயானத்தில் அடக்கம் சய்யப்படும்.

இவற்றுக்கான எல்லா ஏற்பாடுகளையும் தமிழக அரசு பொறுப்பேற்றுச் செய்கிறது என்று புதனன்று மாலை அரசு வெளியிட்ட பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இருளுக்கு காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதி மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு இரவு வேளையில் வீதியோர மின் விளக்குகள் அணைத்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்கள் சிலர் தமதுவீட்டின் முனனால் உள்ள விளக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப் பொருட்களை உடன் அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நான்கு மாதத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக சகல இடங்களுக்குமான...

அரிசி, மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் அவர்கள் தெரிவித்தார். (ம)

## இடம் மாறிய வியாபாரம்

(விசேடநிருபர்)

சின்னக்கடை வியாபாரம் இப்பொழுது யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாக நடைபெற்று வருகிறது.

கடந்தகால அசம்பாவிதங்களின் போதும் இப்பகுதி விற்பனைப்பகுதியாகத் திகழ்ந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்க

மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு திருச்சிராம் பேட்டை மயானத்தில் அடக்கம் சய்யப்படும்.

இவற்றுக்கான எல்லா ஏற்பாடுகளையும் தமிழக அரசு பொறுப்பேற்றுச் செய்கிறது என்று புதனன்று மாலை

காப்பை முன்னிட்டு இரவு வேளையில் வீதியோர மின் விளக்குகள் அணைத்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்கள் சிலர் தமதுவீட்டின் முனனால் உள்ள விளக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோணமலை, கல்முனையிலும் கடும் சண்டை தொடர்கிறது!

(நமது நிருபர்கள்)

**மன்னாரில் கஜுவத்தை (சொண்டச்சி) என்ற இடத்தில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவமுகாமை விடுதலைப்புலிகள் நேற்றுக் கைப்பற்றினர். இம்முகாமில் இருந்த இராணுவத்தினர் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் திருக்கோணமலை மாவட்டம் ஆகியவற்றிலும் மூதூர் பகுதியிலும் தொடர்ந்து விடுதலை புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் சண்டைநடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திருக்கோணமலை மூன்றாம் கட்டையடி அனுராதபுரச் சந்தியிலும் கல்முனையிலும் சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## 13 தமிழர் சுட்டுக்கொலை

கந்தளாயில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று பதின்மூன்று தமிழரைச் சுட்டுக்கொன்றனர்.

## 14பேரின் சடலம் எரிக்கப்பட்டது

நேற்று முன்தினம் சீனன்குடாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பதின்நான்கு பேர் ரயர் போட்டு எரிக்கப்பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூரவைக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சிற்றூரவை வட்ட அவை உறுப்பினர்களுக்குத் தற்போதைய சூழ்நிலை பற்றிய விளக்கமளிக்கும்முகமாக வலிகாமத்திலும், தென்மராட்சியிலும் இரண்டு கூட்டங்கள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக் காலை மானிப்பாய் பகுதியில் விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 1200 பேர் இறந்ததாக அரசு தகவல்

(கொழும்பு)

கடந்த பத்துநாட்களாக வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட சண்டையின் காரணமாக 1200 பேருக்குமேல் இறந்துள்ளதா கொழும்பில் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் உண்மையில் இறந்தவர்களின் எண்ணிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசியப் பொருட்களை உடன் அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நான்கு மாதத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக சகல இடங்களுக்குமான போக்குவரத்தும், தொலைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆகவே நான்கு மாதத்திற்குத் தேவையான எரிபொருள், மற்றும் அரிசி, மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் அவர்கள் தெரிவித்தார். (ம)

## இடம் மாறிய வியாபாரம்

(விசேடநிருபர்)

சின்னக்கடை வியாபாரம் இப்பொழுது யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாக நடைபெற்று வருகிறது.

கடந்தகால அசம்பாவிதங்களின் போதும் இப்பகுதி விற்பனைப்பகுதியாகத் திகழ்ந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்கு பொருட்கள்வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பகுதியிலுள்ள அகதி முகாம்களை நேற்று யாழ். அரசாங்க அதிபர் பார்வையிட்டார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பாடசாலைகளிலும், கோவில்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் விமானத் தாக்குதல்

ஏழாலைப் பகுதியில் நேற்று மேற்கொளளப்பட்ட விமானத் தாக்குதலால் பலர் காயமடைந்தனர், அவர்கள் பற்றிய பெயர் விபரம் வருமாறு:

மு. கந்தசாமி வயது 43,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பஸ்கள் ஓடவில்லை; நல்லூர் தட்டாதெரு மினி பஸ் நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக பஸ்நிலையங்களாக தற்பொழுது நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலிலும் யாழ். கச்சேரியடியிலும், தட்டாதெருச் சந்தியிலும், ஓட்டுமடச் சந்தியிலும் மினி பஸ்களும் ஒட்டோக்களும் தரித்து நிற்கின்றன.

யாழ். கோட்டைப் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் மோதல்கள் காரணமாகவும் ஷெல் அடிகாரணமாகவும் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது. இதனால் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி சாவகச்சேரி, பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய பகுதிகளுக்கு நல்லூர் கந்தசாமி கோயிலடியில் இருந்தும், கொழும்புத்துறை பகுதிகளுக்கு யாழ். கச்சேரியடியில்இருந்தும்கே கே.எஸ். சுன்னாகம், மானிப்பாய் பகுதிகளுக்கு தட்டாதெருச் சந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இதனால்தான் ஈ.பி. ஆர். எல். எவ். இங்கு வேண்டாம் என்றேன்

## "மகனிறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலியறுந்தால் சரி" - கருணாநிதி

(சென்னை)

"மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலி அறுத்தால் சரி" என்பதுபோல் இருக்கிறது கோடம் பாக்கத்தில ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதிற்கு பொறுப்பேற்று நான் பதவிவிலக வேண்டும் என பா சிதம்பரம் கேட்பது என பத்திரிகையாளர் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த தமிழக முதல்வர் மு. கருணாநிதி கூறினார்.

மேலும் அவர் பத்திரிகையாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் "ஆயுதபாணிகளாகவோ அல்லது ஆயுதமின்றியோ எந்த ஒரு தமிழ் குழுவும் தமிழ் நாட்டில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது" என்றுதமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் பேசும் பொழுதே முதல்வர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் தமிழ் நாட்டில் அமைதியை குலைத்து சட்டம், ஒழுங்குகளை மீள விரும்பும் எவராயினும், கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றுக் கூறியதுடன் தமிழ் போராளிகள் பற்றிய விடயத்தில் ஒரு பொதுவான கருத்தை உருவாக்கிக் கொள்ளும் வகையில் வெகு விரைவில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றினை நடத்துவதற்கான ஏற்பாட்டினை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரிசாப் போராளிகள் இங்கு வரக் கூடாது என்று முன்பே கூறியிருந்தேன். ஈ பி. ஆர் எல் எவ். இயக்கத்தைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மும்முனை தாக்குதலுடன் வசாவிளான் வந்தஇராணுவம்புலிகளால்முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று வசாவிளான் சந்தியில் விடுதலைப்புலிகளின் காவல் அரண்களை உடைத்துக் கொண்டு வெளியேறும் முயற்சியில் பல தடவைகள் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதல்களை விடுதலைப்புலி வீரர்கள் வெற்றிகரமாக முறியடித்தனர்.**

நேற்று அதிகாலையிலிருந்து வசாவிளான் சந்தி காவல் அரண்கள் மீது ஏககாலத்தில் ஷெல் ஏவுகணைத் தாக்குதல்களும் நேரடித் துப்பாக்கிப் பிரயோகமும் ஹெலிகொப்ரரிலிருந்து துப்பாக்கிச்சூடுகளும் விட்டு விட்டு நடத்தப்பட்டன. வசாவிளான் சந்தியிலிருந்து கட்டுவன் சந்திக்கும் விமானநிலைய சந்திக்கும் (ரேர்மினல் பார் சந்தி) இடையில் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரே சரமாரியாக நேரடித்துப் பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்தாக்குதல்களால் விடுதலைப்புலிகளின் காவல் அரண்களைச் சுற்றிலும் கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்ததுடன் பாரிய மரங்களும் முறிந்து வீழ்ந்தன.

இத்தனைக்கும் மத்தியில் விடுதலைப்புலிகள் காவல் அரண்களையும் கட்டிடங்களையும் கவசமாகப் பாவித்து தாமும் பின் வாங்காது இராணுவத்தினரையும் ஓரங்குல மேனும் முன்னேறவிடாது எதிர்த்தாக்குதல்களை நடத்தினர்.

### குரும்பசிட்டியில் பெரும் வீடு சேதம்

இதே வேளையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் விமாநிலையத்துக்கு சமீபமாக குரும்பசிட்டியில் நடந்தவிமானக்குண்டு வீச்சில் வீடுஒன்று பலத்த சேதத்துக்குள்ளானது. விடுதலைப்புலிகளின் காவல் அரண் ஒன்றுககு அருகில் அமைந்திருந்த இவ் வீட்டின் கூரைகளும் சுவர்களும் தள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் யாழ்நகரில் பலி எடுத்தது!

(விசேடநிருபர்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லில் யாழ். மானிப்பாய் வீதி பெண்மணி ஒருவர் காலமானார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் (20. 6. 90) புதனன்று இரவு 12 மணியளவில் நடைபெற்றது. யாழ். மானிப்பாய் வீதி (கோணாந்தோட்டம்) திருமதி மகாதேவா நளாயினி (வயது 33) என்பவரே அவ்வாறு பலியானவராவார். (21)

## செஞ்சிலுவைச் சங்கம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அகதிமுகாம்களில் உள்ள, குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மருந்து வகைகளை செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கி வருகின்றனர். இச்சேவை நேற்றில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால்தற்பொழுது போதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணையால் போக்குவரத்து இல்லை

(வேலணை)

கோட்டை முகாம் ஷெல் தாக்குதல்களை தொடர்ந்து பண்ணை வழிப் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. தீவுப் பகுதிக்கு செல்லும் பயணிகள் அராலி பாதையூடாக தற்பொழுது தமது போக்குவரத்துகளை செய்து வருகின்றனர். இருந்தும் இப்பாதை பயணத்திற்கு பெரும் தொகைகட்டணத்தை உரிமையாளர்கள் அறவிட்டு வருவதும் குறிப்பிடதக்கதாகும்.

# வவுனியாவிலும் உணவுப் பொருட்கள் விலையேற்றம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் உணவுப் பொருட்களின் விலை மேலும் அதிகரித்துள்ளது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்கள் வரவழைக்கப் படாத காரணத்தினாலும், வவுனியா நகரப்பகுதியில் உள்ள மொத்தமாக விற்பனை செய்யும் கடைகள் பூட்டப்பட்டிருப்பதாலும், நகரத்தை நோக்கி மக்கள் செல்லாத காரணத்தினாலும் பொருட்களின் விலை மேலும் அதிகரித்துள்ளது.

ஓமந்தையில் உள்ள கடை ஒன்றில் ஒரு கிலோ கிராம் சீனியின் விலை ஐம்பது ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகப் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நகரப்பகுதியிலிருந்து இராணுவத்தினரிடம் தப்பித்துக் கொள்ளும் நோக்குடன் கிராமப்புறங்களை நாடி, அகதிகளாக வந்துள்ள மக்களைச் சுரண்டும் நோக்குடனேயே கண்மூடித்தனமான விலைகளுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# வன்னிப்பிராந்தியத் தளபதிக்கு மக்கள் அஞ்சலி!

(வவுனியா)

கடந்த திங்கட்கிழமை (18-6-90) வவுனியா நகரப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவப் படையினருக்குமிடையே இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் வீரமரணமடைந்த வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் மேஜர் தயாபரனின் பூதவுடல் வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வருகிறது.

செவ்வாய்க்கிழமை பாவற்குளம்சாஸ்த்திரி கூழாங்குளம் மருக்காரம்பளை போன்ற இன்னும் பல பகுதிகளில் தயாபரனின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான தமிழீழ மக்கள், அழுத கண்களுடன் அவரின் பூதவுடலுக்கு மலர் வளையம் சாத்தி, மரியாதை செலுத்தினார்கள்.

மேற்படி பொறுப்பாளரின் இழப்பையிட்டு வவுனியா மாவட்டம் சோகமயமாகக் காட்சிதருகிறது. வீதிகளில் தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. (தி)

# வல்வெட்டித்துறை மீது கடற்படை ஷெல் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

வல்வைக் கடற்பரப்பில் இருந்து ஸ்ரீலங்கா கடற்படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கிச் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஒரு பொது மகனின் வீட்டின் பிரதான பகுதி நாசமானது அயலவர் ஒருவரின் கால் நடை ஒன்று பெரும் பாதிப்பிற்குள்ளானது. மற்றுமொரு ஷெல் தாக்குதலால் வல்வைச் சிவன் கோவில் மதில் பெரும் சேதம் அடைந்தது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 2.00 மணியளவில் வல்வைக்கடலில் தரித்து நிற்கும் கடற்படையினர் ஏவிய ஷெல் தாக்குதலால் தான் மேற்படி சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இத் தாக்குதலால் வல்வை அப்புக்காத்து வீதியில் இருக்கும் முத்துலிங்கம் சந்திரலிங்கம் என்பவரது பல ஆயிரம் பெறுமதியான வீடு பலத்த சேதத்திற்குள்ளானது.

இதற்கு அண்மையில் உள்ள சுப்பிரமணியம் நித்தியானந்தம் என்பவரது வீட்டுமுற்றத்தில் விழுந்துவெடித்ததால்ஒரு நாள் குட்டியீன்றஆடு பெரும் காயத்திற்குள்ளானது மற்ற ஒரு ஷெல் வல்வைச் சிவன் கோவில் வீதியில் விழுந்து வெடித்த தால் ஆலய பெரும் சுவரும் குருக்கள் வீடும்பெரும் சேதத்திற்குள்ளானது.

இத்தாக்குதலால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வல்வெட்டி வேவிற் பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள் (68)

வடமராட்சியில்

# ஹெலித்தாக்குதல்; வீடுகள் படகுகள் சேதம்

(வல்வெட்டித்துறை)

வல்வைப் பகுதியில் ஸ்ரீலங்கா ஹெலி தாக்கியதால் பல வீடுகள், தரையில் கட்டிநின்ற படகுகள் என்பன சேதமடைந்தன. ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த (20-6-90) புதன் கிழமை காலை 11-00 மணியளவில் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

பலாலிப்பகுதியில் இருந்து தொண்டமானாறு வழியாக ஸ்ரீலங்கா ஹெலிக்கொப்டர் திடீரென ஊறணி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, அம்மன் கோயிலடி, மயிலியதனை தொண்டமானாறு பகுதிகள் மீது பல தடவைகள் கலிபர் வேட்டுக்களால் தாக்கியதுடன் ஆதிகோவிலடி கடற்பகுதியில் தரையில் கட்டியிருந்த மீனவர்களின் படகுகளை நோக்கி ஷெல்களையும் வீசியது இக் கைக்குண்டுகள் திசைமாறி வெடித்ததால் பல வீடுகள் சேதத்துக்குள்ளானதுடன். வல்வை வாசியான ரி. ஜெயராஜ் (வயது 30) என்னும் வாலிபரின் கால் ஒன்று பலத்த சேதத்திற்குள்ளாகி மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலும் ஹெலிகொப்டரின் தாக்குதலை தமிழீழ விடுதலைப்புலிகள் பதில் தாக்குதலால் பின்னடையச் செய்தனர். புலிகளின் தாக்குதலால் ஸ்ரீலங்கா ஹெலிக்கொப்டர் மீண்டும் பலாலிப் பகுதியைச் சென்றடைந்தது.

இதன் காரணமாக சம்பவத்திற்குள்ளான இடங்களில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து ஆலையங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்துள்ளார்கள் பல பாடசாலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

மேலும் மீனவர் செறிந்து வாழும் ஆதிகோவிலடி வாசிகளின் வீடுகளும் மீன்பிடி வள்ளங்களுமே பெருமளவில் சேதமானது. (68)

# தென்மராட்சி நோக்கி மக்கள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறி பெருந்தொகையான மக்கள் தென்மராட்சிப்பகுதி நோக்கி இடம் பெயர்கின்றனர். இப்பகுதியில் உணவுப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது, எனினும் ப.நோ. கூட்டுறவுச்சங்கங்கள் கட்டுப்பாட்டு விலையில் குறிப்பிட்டளவு பொருட்களை வழங்கி வருகின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். இருப்பிடவசதியில்லாதோருக்கு சிற்றூர் அவையினர் உதவியளிப்பதில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இப்பகுதியில் விடுதலைப்புலிகளின் ஆலோசனையின் பேரில் பதுங்கு குழிகள் வெட்டுவதில் மக்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். சில இடங்களில் பதுங்கு குழி வெட்டுவதற்கு ஆயிரம் ரூபாவரை அறவிடப்படுகிறது. (மு)

# கோப்பாயில் கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் வரும் புதன் கிழமை (27. 6. 90) நடைபெறும்.

மஹா கும்பாபிஷேகத்திற்கான சகல ஏற்பாடுகளையும் ஆலயத் தேவஸ்தான பரிபாலன சபையினர்கள் கவனித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# பசிக்காக உழைக்க வேண்டும்

''பெற்றோரின் உழைப்பில் பிள்ளைகள் தங்கி வாழும் நிலை மாற வேண்டும் உழைப்பின் மகிமையை உணர்ந்து ஓய்வான நேரங்களைக் கூட உழைப்பிற்குப் பயன்படுத்த வேண்டும் அப்போது தான் பொருளாதாரத்தை வளம் படுத்தவும் நாட்டைச் தன்னிறைவடையச்செய்யவும் முடியும் பசிக்காக உழைக்க வேண்டிய போதுகூட எம்மவர்கள் 'ஐசிங்' செய்யப்பழகிப் போலி சௌரவத்தில் வாழுகின்றார்கள்.

இவ்வாறு சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பனியினால் மந்துவிலில்ஆரம்பிக்கப்பட்ட பனந்தும்பு உற்பத்தி சுத்திகரிப்பு பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் பேசுகையில் பனை அபிவிருத்திச்சபைப் பொது சனத்தொடர்பு உத்தியோகத்தர் திரு. வீ. ஜீ தங்கவேல் குறிப்பிட்டார்.

இவ்விழா மந்துவில் றோ.க பாடசாலை அதிபர்க.கதிரேசு தலைமையில் நடைபெற்றது. பனை அபிவிருத்திச் சபை உள்ளகக் கணக்காய்வாளரும் சாவகச்சேரி ஏற்றுமதிக்கிராம மக்கள் கம்பனி முகாமை உத்தியோகத்தருமான எஸ். ஜே ஜெயக்குமார் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

கிராம மட்டத்தில் சுய தொழில் வாய்ப்பையும் வருவாயையும் ஈட்டிக் கொடுப்பதே எமது திட்டமாகும் பொருளாதார மேம்பாட்டில்

# சேவை மனப்பான்மையுடன் செயலாற்றுபவர்களே தேவை

(கொழும்புத்துறை)

மனச்சாட்சியை மதித்து சமூக சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றுபவர்களே இணக்கமன்றுகளில் இடம்பெறவேண்டும். சமாதானத்தையும்' உண்மையான நீதியையும் நிலைநாட்டி விடுதலைப்புலிகளுக்கும் பெருமை தேடித்தர இணக்கமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு இளவாலை கிராம சேவை அலுவலர் பிரிவின் இணக்க மன்று ஆரம்ப வைபவத்தில் பேசுகையில் திரு. வை. செகராசசிங்கம் கூறினார். இக்கூட்டம் பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. சிவா தலைமை

# இடம் பெயர்ந்தோர் மணிப்புரியில் தஞ்சம்

(கொழும்புத்துறை)

யர் 1ம், 2ம், 3ம் குறுக்குத்

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மின்சார வசதி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் மின்சார விநியோகம் சராக்கல், புனரமைப்பு வேலைகள் செய்யப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தெரிவித்தார்,

இதற்கான நடவடிக்கைகளை மின்சார சக்திவள அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. பின்வரும் கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு மின்சாரம் பெறப்போகின்றன.

நாவற்காடு மிருசுவில் வடக்கு, கெற்பலி, கச்சாய், மறவன்புலவு, கப்புதூ, குறிகாடுவான், நெடுந்தீவு, நாவலடி, பூம்புகார் அரியாலை கிழக்கு மணிப்புரி, சிவநகர், முரசுமோட்டை, பன்றிசுட்டான் சிறுப்பிட்டி தெற்கு, அந்ரானை வீராவாணி, புத்தூர் உதய தாரகை பொன்னாலை வீடமைப்புத்திட்டம், கசுனா கடற்கரை புதிய வீதி, மாரீசன் கூடல், இளவாலை. (24)

# கடைப்பெயர்கள் தமிழில்

(கொழும்புத்துறை)

தீவுப்பகுதியில் வேலணை, வங்களாவடி பல நோக்கச் கூட்டுறவு சங்கத்தில் உள்ள மக்கள் கடை, கிராமிய வங்கி ஆகியவற்றில் தமிழில் வாசகங்கள் பெரிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. காவலூரில் சில வர்த்தக நிலையங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் காணப்படுகின்றன.

பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத் தக்கது. (24)

# காணவில்லை



**சண்முகலிங்கம் பஞ்சரட்ணம்**

சண்முகலிங்கம் பஞ்சரட்ணம் ஆகிய எனது தாயார் 18 - 6 - 1990 நண்பகல் 12 மணியிலிருந்து இன்று வரை காணாமல் போய் விட்டார். கடைசியாக அவர் பச்சை நிற சேலையும், மென்பச்சை நிற மேலங்கியும் அணிந்திருந்தார். கையில் சுடுதண்ணீர் போத்தல், துணிப்பை போன்றனவும் வைத்திருந்தார். வயது 55. சிவந்த மேனி. நரைத்த மயிர் இவரின் அடையாளங்கள். மேற்கூறிய விபரங்களைக் கொண்ட இவரைக் கண்டவர்கள் ச. தயாபரன் மே/பா சி. சண்முகரட்ணம் 'சக்தி இல்லம்' விநானை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்
ச. தயாபரன்
(R-371)

# 4 ஆவது வருட நினைவஞ்சலி

தல் மேற்கொண்டனர்.

ஒரு பொது மகனின் வீட்டின் பிரதான பகுதி நாசமானது அயலவர் ஒருவரின் கால்நடை ஒன்று பெரும் பாதிப்பிற்குள்ளானது. மற்றுமொரு ஷெல் தாக்குதலால் வல்வைச் சிவன் கோவில் மதில் பெரும் சேதம் அடைந்தது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 2.00 மணியளவில் வல்வைக்கடலில் தரித்து நிற்கும் கடற்படையினர் ஏவிய ஷெல் தாக்குதலால் தான் மேற்படி சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இத் தாக்குதலால் வல்வை அப்புக்காத்து வீதியில் இருக்கும் முத்துலிங்கம் சந்திரலிங்கம் என்பவரது வீட்டுமுற்றத்தில் விழுந்துவெடித்ததால்ஒரு நாள் குட்டியீன்றஆடு பெரும் காயத்திற்குள்ளானது மற்ற ஒரு ஷெல் வல்வைச் சிவன் கோவில் வீதியில் விழுந்து வெடித்ததால் ஆலய பெரும் சுவரும் குருக்கள் வீடும்பெரும் சேதத்திற்குள்ளானது.

இத்தாக்குதலால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வல்வெட்டி வேவிற் பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள் (68)

... லன் சம்பியன்கள் கவனித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# சேவை மனப்பான்மையுடன் செயலாற்றுபவர்களே தேவை

(கொழும்புத்துறை)

மனச்சாட்சியை மதித்து சமூக சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றுபவர்களே இணக்கமன்றுகளில் இடம்பெறவேண்டும். சமாதானத்தையும்' உண்மையான நீதியையும் நிலைநாட்டி விடுதலைப்புலிகளுக்கும் பெருமை தேடித்தர இணக்கமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு இளவாலை கிராம சேவை அலுவலர் பிரிவின் இணக்க மன்று ஆரம்ப வைபவத்தில் பேசுகையில் திரு. வை. செகராசசிங்கம் கூறினார். இக்கூட்டம் பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. சிவா தலைமையில் நடைபெற்றது.

இணக்கமன்றுக்கான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (24)

... படுத்தவும் நாட்டைத் தன்னிறைவடையச்செய்யவும் முடி... விலில்ஆரம்பிக்கப்பட்ட பனந்தும்பு உற்பத்தி சுத்திகரிப்பு பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் பேசுகையில் பனை அபிவிருத்திச்சபைப் பொது சனத்தொடர்பு உத்தியோகத்தர் திரு. வீ. ஜீ தங்கவேல் குறிப்பிட்டார்.

இவ்விழா மந்துவில் றோ.க பாடசாலை அதிபர்க.கதிரேசு தலைமையில் நடைபெற்றது. பனை அபிவிருத்திச் சபை உள்ளகக் கணக்காய்வாளரும் சாவகச்சேரி ஏற்றுமதிக்கிராம மக்கள் கம்பனி முகாமை உத்தியோகத்தருமான எஸ். ஜே ஜெயக்குமார் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

கிராம மட்டத்தில் சுய தொழில் வாய்ப்பையும் வருவாயையும் ஈட்டிக் கொடுப்பதே எமது திட்டமாகும் பொருளாதார மேம்பாட்டில் பெண்கள் காட்டிவரும் ஈடுபாடு பாராட்டிற்குரியது பின்தங்கிய கிராமங்கள் சுய தொழில் உற்பத்தித்துறை மூலமே அபிவிருத்தி அடைய முடியும் என்றுசபை விரிவாக்க உத்தியொகத்தர் திரு. சி மகேந்திரன் பேசுகையில் கூறினார்.

சந்தைப்படுத்தும் உவிதயாளர் க.மன்மதராசா,கொடிகாமம் தெ: ப. பொ. கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் சி. இரத்தினசிங்கம், உழைக்கும் மகளிர் நிறுவன அமைப்பாளர் திருமதி பவானி தங்கத்துரை, மக்கள் கம்பனி முகாமையாளர் திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி, எழுத்தாளர் (வளவை வளவன்) ரீ. எம். செல்லத்தம்பி ஆகியோரும் பேசினர்.

உதவி உற்பத்தி உத்தியோகத்தர் திரு. க. வைரமுத்து பனந்தும்பு சுத்திகரிக்கும் பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

சண்முகலிங்கம் பஞ்சரட்ணம் ஆகிய எனது தாயார் 18 - 6 - 1990 நண்பகல் 12 மணியிலிருந்து இன்று வரை காணாமல் போய் விட்டார். கடைசியாக அவர் பச்சை நிற சேலையும், மென்பச்சை நிற மேலங்கியும் அணிந்திருந்தார். கையில் சுடுதண்ணீர் போத்தல், துணிப் பை போன்றனவும் வைத்திருந்தார். வயது 55. சிவந்த மேனி. நரைத்த மயிர் இவரின் அடையாளங்கள். மேற் கூறிய விபரங்களைக் கொண்ட இவரைக் கண்டவர்கள் ச. தயாபரன் மே/பா சி. சண்முகரட்ணம் 'சக்தி இல்லம்' விநாயகர் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்
ச. தயாபரன்
(R-371)

# இடம் பெயர்ந்தோர் மணிப்புரியில் தஞ்சம்

(கொழும்புத்துறை)

இலங்கை இராணுவத்தின்ஷெல், ஹெலி, பொம்பர் தாக்குதல்களை முன்னிட்டு யாழ். நகரப்பகுதியில் குடியிருந்த பெரும்பாலான மக்கள் நேற்று முன்தினம் குடிபெயர்ந்து பின்வரும் இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மணிப்புரி, வசந்தபுரம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலை, கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம், நல்லூர் கந்தன் ஆலய மேற்கு வீதியில் உள்ள விநாயகர் ஆலயம், மங்கையற்கரசி வித்தியாலயம் ஆகியவற்றுள் அகதிளாக இருக்கின்றனர்.

ஷெல், ஹெலி, பொம்பர் தாக்குதல் காரணமாகக் கொட்டடி, நாவாந்துறை, குருநகர், கரையூர், பாஷையூர் 1ம், 2ம், 3ம் குறுக்குத் தெருக்கள் யாழ் மடம் வீதி, திட்டி ஆகிய பகுதிகளில் இருந்து ஆயிரத்துக்குமதிகமான பெரும்பாலான மக்கள் மேற்படி இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு அப்பகுதியில் உள்ள மக்கள் பரவலாக உதவிகள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## மண்டலாபிஷேகம் பூர்த்திவிழா

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீகாலாக்கினி ருத்திரசமேத அருள்மிகு ஸ்ரீமகாமுத்துமாரி அம்பாள் கோயில் நாற்பத்தெட்டாவது நாள் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகிறது. (24)


## பாணுக்கு பெரும் கிராக்கி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியதை அடுத்து சில பேக்கறிகாரர்கள் பாண்போடுவதை நிறுத்தியுள்ளனர்.

சிலர் ஒரு நேரமாக பாண் போட்டு மக்களுக்கு விநியோகிக்கின்றனர் இதனால் யாழ்ப்பாண நகரத்தில் பாணுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (43)

# 4 ஆவது வருட நினைவஞ்சலி



மலர்வு
08 - 08 - 1957

உதிர்வு
20 - 06 - 1986

## பவுளன் கிறிஸ்ரி

அன்பகலாக் குலவிளக்கே
ஆண்டவன் அழைத்தானோ?
துன்பம் துடைத்த எங்கள்
தூமணியே துயர் மிகும்
எம்நிலை சொல்ல இயலாதே
ஏதுநீர் எங்கு சென்றீர்?
நின்பிரிவு எமை வாட்டுதே
நினைக்க மனம் வேகுதே! அந்தோ!!

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மகள், சகோதரி,
உறவினர், நண்பர்கள்.

பாஷையூர்.
(B/ 1189)


UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

SUPPLY OF AIR CONDITIONERS

Sealed Tenders are invited forthe supply of air conditioners at the following locations:

1. Medical Faculty-
   a. Department of Physiology 01 No.
   b. Department of Pathology 01 No.
   c. Department of Bio-Chemistry 01 No.
   d. Department of Anatomy 01 No.
   e. Medical Faculty Library 01 No.
   f. Medical Faculty Board Room 01 No.
2. Library- 02 Nos.
3. Finace Branch 01 No.
4. Department of Maths- Computer Unit 01 No.
5. Computer Unit 03 Nos.

The Tenders should be forwarded to the Registrar, University of Jaffna by registered post or personally with the mark "Tender for the Supply of Air Conditioners" to reach him on or before the 9th July 1990 at 10 a. m. Tenders will be opened on the same day at 10. 30 a. m.

Registrar

(B-1171)



# பிடவை மின்தறி நிலையம்

* மின்தறியில் வேலைசெய்து அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை
* அனுபவமற்றவர்களுக்கும் வேதனத்துடன் பயிற்சி அளிக்கப்படும்
* தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

# லீனா ரெக்ஸ் இன்டஸ்றி

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)


## கண்ணீர் அஞ்சலி!



## செ. சிவதாசன்

(லோலோ)

தோற்றம்: 1969.01.13
மறைவு: 16.06.1990

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஏழாலை ஊர் மக்கள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மாங்குளம்.
(R/369)


யாழ் மக்களுக்கு
புதியதோர் சேவை !

குறுகிய காலத்தில்
தரமான
கலர் பிலிம்
விரைவாக
கழுவுவதற்கு

**Cosmos Marketing Services**
1st Floor,
337, Kasthuriar Road,
**JAFFNA.**

(B/1160)

# நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு!

யாழ் குடாநாட்டில் போர் என்ற எரிமலை புகைத்துக்கொண்டுதான் இருக்கிறது. மக்கள் வதியும் பகுதிகளில் ஹெலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருக்கின்றன. ஆனால் 1987 ஒக்டோபர் வரையிலான காலப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகொண்டிருந்ததை விட இப்போது நிலைமை வித்தியாசமானது. அப்போதெல்லாம் யாழ். குடாநாட்டில் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு ஸ்ரீலங்கா இராணுவத்தின் காவல் சாவடிகள் இருந்தன. ஆதலால் மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் அன்று மக்கள் தமது அன்றாட வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். கடைகள் திறந்திருந்தன. அலுவலகங்கள் இயங்கின. போக்குவரத்து இருந்தன. ஆனால் அன்றும் எரிபொருள்தடை, பொருளாதாரத்தடை இருந்தது.

1987 க்கு முன்பிருந்த நிலை இன்றில்லை. மக்கள் புலம்பெயர்ந்து பாதுகாப்பான கிராமங்களில் தங்கியிருக்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் அகதிகளாக வாழும் பரிதாப உயிர்களுக்கு மனித நேயத்தோடு அத்தியாவசிய பண்டங்களையும், வேறு தேவைகளையும் முகம் சுளிக்காமல் பணத்துக்கு அளிக்கக் கூடிய வர்த்தகர்களைக் காணவில்லை.

**அப்புறப்படுத்தப்படும் பொருட்கள்**

யாழ்நகரில் பெரிய கடைப் பகுதியிலுள்ள கடைகளிலிருந்து பொருட்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. அப்புறப்படுத்தப்படும் பொருட்கள் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இது இப்படியிருக்க, யாழ். டச்சுக் கோட்டையிலிருந்து ஆயிரம் மீற்றர் வலயத்துக்கு அப்பால் - ஸ்டேஷன் சந்தி, இலுப்பையடிச் சந்தி, முஸ்லிம் வட்டாரம் பிளவுஸ் சந்திக்கு அப்பால் பலசரக்கு, உணவுப் பண்டங்களின் வியாபாரம் வழமை போல் நடைபெறுகின்றன. இக் கடைகளில் அத்தியாவசிய பண்டங்களுக்குச் செயற்கையான தட்டுப்பாடு நிலவுகின்றது. அதனால் சங்கிலித் தொடர்போல் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன இவ் விலைவாசிகள் ஏற்றத்தினால் அகதிகளும், குறைந்த வருமானமுடையவர்களும் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

முன்பெல்லாம் அத்தியாவசியமான பண்டங்களை ஏற்றிச் சென்ற முதலாளிகள் தமது வீடுகளில் வைத்தும் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்றார்கள். இதனால் ஊரிலுள்ள சிறு வியாபாரிகள் தங்கு தடையின்றிப் பொருட்களை விற்கக் கூடியதாகஇருந்தது. இன்று பெரிய முதலாளிகள் பிரச்சினைகளை அணுகும் முறையும் மாறியுள்ளது. பதற்ற நிலை நீடிக்கும் என்ற எண்ணத்திலும் பொருட்களைச் சந்தைப் படுத்தாமல் பதுக்கியுள்ளார்கள். மண்ணெண்ணெய் வியாபாரம் முதல்அரிசி வியாபாரம் வரைபெரியகடை வியாபாரிளின் கையிலிருப்பதால்பாவனையாளர்கள் அவர்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. அவர்கள் கோடிகோடியாகச் சம்பாதிக்கலாம் என்றஎண்ணத்தில் செயற்படுறார்கள்.

> யாழ். அரசாங்க அதிபர் மாநாடு என்ற பெயரில் 'வெற்றிலை வைத்து' அழைத்தால்தான் நம்மவர்கள் வேலைக்குத் திரும்புவார்கள். காலம் மாறினாலும அரச ஊழியர்களின் மனோபாவம் மாறவில்லை.

**தனியார், அரசநிறுவனங்கள்**

யாழ் நகரில் இன்றுடன் நான்காவது நாளாக திணைக்களங்கள், வங்கிகள், தனியார் ஸ்தாபனங்கள் ஆகிய உத்தியோகத்தர்களும், மேலதிகாரிகளும் வராததினால் மூடப்பட்டிருந்தன. வங்கிகளும், தனியார் ஸ்தாபனங்களும் பாதுகாப்பற்ற பகுதியான பெரிய கடைப் பகுதியில் அமைந்திருந்ததால் அவற்றைத் திறக்க முடியவில்லை என்பதில் நியாயமிருக்கலாம். ஆனால் தற்போது பாதுகாப்பான இடமென்று கருதப்படும் நல்லூருக்கு அப்பால் உள்ள மாநகர சபை செயலகம் என்பவற்றிற்கு ஊழியர்கள் வந்தார்கள். ஆனால்கடமைகள்ஏனோ நடைபெறவில்லை. முத்திரைச் சந்தையில் உள்ளகல்வித் திணைக்களமும் இயங்க வில்லையாம். வேலைக்கு வந்தவர்கள் வேலை செய்யாமல்திரும்பியமைக்கு என்ன காரணம்? இதில் வேடிக்கை என்னவென்றால்; பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் மக்களுக்கு உணவு முத்திரை, ஜனசக்திப் பொருட்களை விநியோகிப்பதில் கடமையே கண்ணாயிருந்தனர். இவர்கள் வேலை செய்ய முடியுமென்றால் மற்றவர்களால் ஏன் வேலை செய்ய முடியாது?

**இ. போ. ச பஸ்களும் தனியார் பஸ்களும்**

ஸ்ரீ லங்கா இராணுவம் 1987க்கு முன் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் ஷெல் தாக்குதல் இடம் பெற்றால் ஆரிய குளம் சந்திக்கு அப்பால் இ. போ. ச. பஸ்களும், தனியார் பஸ்களும் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்வது வழக்கம். ஏன் பழைய மாதிரிச் சேவை செய்யவில்லை என்று

(நக்கீரன்)

கேட்டால் ''பெற்றோல் இல்லை'' என்று கையை விரிக்கிறார்கள். ஆனால் ரூ. 500/- பேசி, கொழும்பு வரை போவதாகச் சொல்லி இடை வழியில் திரும்பி வருவதற்கு மாத்திரம் எரிபொருள் கையிருப்பு உண்டு. இந்த விஷயத்துக்கு முகம் கொடுக்க மதியில்லாதவர்கள் ஏன் மினிபஸ் சங்கத் தலைவர்கள் கண்மூடி மௌனியாக இருக்கிறார்கள்.?

**விடுப்புப் பார்த்தல்**

திணைக்களம் ஒன்றில் வேலை பார்க்கும் ஒரு அதிகாரியை அணுகி (அவர் திணைக்களம் பாதுகாப்பான இடத்தில்) 'ஏன் வேலைக்கு வரவில்லை' என்று கேட்டபோது, 'வாகனப் போக்குவரத்து இல்லை' என்று பதில் வந்தது. இவர் இருப்பது அதிக தூரத்தில் இல்லை. எல்லாம் 6 மைல் தூரத்துக்குள் தான். மறுநாள் பார்த்தால் அவர் நகர வீதிகளில் விடுப்புப் பார்ப்பதை அவதானிக்க முடிந்தது?

போக்கு வரத்து இல்லையென்றால் சைக்கிளில் வேலைக்குப் போவதுதானே. இங்கிலாந்து முதலிய நாடுகளில் கடமை உணர்ச்சி உள்ள ஊழியர்கள் நடையாகவும், சைக்கிளிலும் தான் வேலைக்குச் செல்கிறார்கள்.

ஆனால் இங்கு?

யாழ் அரசாங்க அதிபர் மாநாடு என்ற பெயரில் வெற்றிலை வைத்து அழைத்தால்தான் நம்மவர்கள் வேலைக்கு வருவார்கள். அவ்வளவுதான். காலம் மாறினாலும் எமது மனோபாவம் மாறவில்லை.

## பிறேசில் கோஸ்டாரிக்கா வெற்றி

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் 'C' பிரிவு இறுதி இரண்டு ஆட்டங்கள் முடிவுற்றுள்ளன. பிறேசில் ஸ்கொட்லாந்துஅணியை 1-0 என்ற ரீதியில் வெற்றி கண்டுள்ளது. சுவீடன் கோஸ்டாரிக்காவிடம் 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்றுவிட்டது. 'C' பிரிவு ஆட்டங்கள அனைத்தும் முடிவுற்ற நிலையில் பிறேசில் தான் ஆடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று முன்னணியில் திகழ்கிறது. கோஸ்டாரிக்கா 2ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஸ்கொட்லாந்து ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது. சுவீடன் தான் ஆடிய 3 ஆட்டங்களிலும் வெற்றி காணத் தவறிவிட்டது.

# இலங்கையில் நடக்கும் யுத்தம் இந்துமாகடல் பிரதேசத்தின் அமைதிக்கு ஆபத்தாகலாம்

## பிரதமர் சிங்கிற்கு ராஜீவ் எச்சரிக்கை

(டில்லி)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நடவடிக்கைகளால் இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்தியாவின் முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இந்திரா காங்கிரசின் தலைவருமான திரு. ராஜீவ்காந்தி எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய யுத்த நிலைமைகள் குறித்து

பிரதமர் திரு. வி. பி. சிங்கிற்கு இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். இக் கடிதங்களிலேயே அவர் மேற்கண்ட எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளால் பாரிய அழிவுகளை எதிர்நோக்கிய நிலையிலுள்ள தமிழ் மக்கள் அந்த அழிவுகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்றும் மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ள அவர், இலங்கையின்நிலைமைகளை தொடர விடும் பட்சத்தில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கே அச்சம் ஏற்படலாம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை திரு ராஜீவ் காந்தியின் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து தற்போதைய அரசு, இலங்கை அரசுடன் முன் நிபந்தனை

இன்றைய நிலைமைக்கு காரணம் என்று கூறியுள்ளதுடன். இந்த அரசின அவசர நடவடிக்கையின் நிமித்தம் வரலாற்றில் பெரும் தவறைச் செய்து விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

## இந்தியா- பங்களாதேஷ் கலப்பு நதி கமிஷன்

(டாக்கா)

இந்தியா- பங்களாதேஷ்

செய்யப் படவுள்ளதுடன் இது பற்றி நல்ல முடிவுகளை உரு

## இந்திய ஈராக் உறவு

(டில்லி)

இந்தியா ஈராக் நாட்டிற்கு ஆறு கோடி டாலர் ரூபாவை கடனாக வழங்க உள்ளது.

அண்மையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. குஜ்ராலுடன் ஈராக்கின் உயர் தலைவர்கள் மேற்கொண்ட தொடர்ச்சியான பேச்சுக்களை தொடர்ந்தே இந்தியா இந்த உதவியினை வழங்க முன்வந்துள்ளது.

இந்த கடனை வழங்குவதற்கான விதிகள் குறித்து இறுதி முடிவுகள் தயாரிக்கப் பட்டு வருவதுடன், ஈராக்கின் மூலப் பொருட்களையும், உபயோகப்பொருட்களையும் விரிவுபடுத்துவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கும், ஈராக்கிற்குமான பொருளாதார உறவுகளை வளர்த்தெடுக்கும் வகையில் இரு நாடுகளுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் இந்த உறவை மேலும் விரிவு படுத்தும் வகையில் இருநாடுகளும் இணைந்து செயல்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# அரசியல் சாதனங்களுடன் வரும் மக்கா யாத்திரிகருக்கு தண்டனை

## சவுதி அரேபியா எச்சரிக்கை

(ரியாட்)

# பிரதேசத்தின் அமைதிக்கு ஆபத்தாகலாம்

## பிரதமர் சிங்கிற்கு ராஜீவ் எச்சரிக்கை

(டில்லி)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நடவடிக்கைகளால் இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்தியாவின் முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இந்திரா காங்கிரசின் தலைவருமான திரு. ராஜீவ்காந்தி எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய யுத்த நிலைமைகள் குறித்து திரு. ராஜீவ்காந்தி இந்திய பிரதமர் திரு. வி. பி. சிங்கிற்கு இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். இக்கடிதங்களிலேயே அவர் மேற்கண்ட எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளால் பாரிய அழிவுகளை எதிர்நோக்கிய நிலையிலுள்ள தமிழ் மக்கள் அந்த அழிவுகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்றும் மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ள அவர், இலங்கையின் நிலைமைகளை தொடர விடும் பட்சத்தில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கே அச்சம் ஏற்படலாம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை திரு ராஜீவ் காந்தியின் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து தற்போதைய அரசு, இலங்கை அரசுடன் முன் நிபந்தனை எதனையும் அமுலாக்காமல் படையினை வாபஸ் பெற்றதே இன்றைய நிலைமைக்கு காரணம் என்று கூறியுள்ளதுடன். இந்த அரசின அவசர நடவடிக்கையின் நிமித்தம் வரலாற்றில் பெரும் தவறைச் செய்து விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. குஜ்ராலுடன் ஈராக்கின் உயர் தலைவர்கள் மேற்கொண்ட தொடர்ச்சியான பேச்சுக்களை தொடர்ந்தே இந்தியா இந்த உதவியினை வழங்க முன்வந்துள்ளது.

இந்த கடனை வழங்குவதற்கான விதிகள் குறித்து இறுதி பயன்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கும், ஈராக்கிற்குமான பொருளாதார உறவுகளை வளர்த்தெடுக்கும் வகையில் இரு நாடுகளுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் இந்த உறவை மேலும் விரிவு படுத்தும் வகையில் இருநாடுகளும் இணைந்து செயல்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்தியா- பங்களாதேஷ் கலப்பு நதி கமிஷன்

(டாக்கா)

இந்தியா- பங்களாதேஷ் கலப்புநதி கமிஷனின் 31ஆவது பொதுக் கூட்டம் நேற்று ஆரம்பமானது. இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இவ்விரு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துக்கொண்டுள்ளார்கள்.

ஒன்பது பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்திய பிரதிநிதிகளின் குழுவுக்கு மத்திய நீர்வளத்துறை இணையமைச்சு திரு மனுபாய் கட்டோரிகா தலைமை வகித்துள்ளார். பங்களாதேஷின் குழுவுக்கு அந் நாட்டு நீர்வள, வெள்ளக்கட்டுப்பாட்டுஇணையமைச்சர் ஜனாப் குலாம் முஸ்தபா தலைமை வகித்துள்ளார்.

இந்தியாவுக்கும்- பங்களாதேஷுக்கும் இடையிலான நீர்வள பிரச்சினைகள் குறித்து இந்த கலப்பு நதி கமிஷன் 1976ஆம் ஆண்டு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் இரு நாடுகளுக்கும் மத்தியிலான நீர்வளம் பற்றிய பிரச்சினைகள் ஆய்வு செய்யப் படவுள்ளதுடன் இது பற்றி நல்ல முடிவுகளை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்தியாவுக்கு மேலும் உதவிகள்

(டில்லி)

இந்தியாவுக்கு உதவி வழங்கும் மேற்குலக நாடுகளிடமிருந்து 650 கோடி டாலர் ரூபாவை இந்தியா பெறவுள்ளது.

இந்தியாவின் நடப்பு வருட மொத்த வளர்ச்சிக்கு இந்த நிதி பயன் படுத்தப்படும். உதவி வழங்கும் இந்த நாடுகளிடமிருந்து கடந்த ஆண்டில் பெற்ற தொகையிலிருந்து இருபது கோடி ரூபாய் குறைவானது என்றும் இந்தியா கூறியுள்ளது.

இத்தாலி உட்பட பாரிஸ் குழுவின் நாடுகள் மேலும் பல உதவிகளை வழங்க முன் வந்துள்ளதாகவும் இந்தியாவினால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டில்

## சட்டம், ஒழுங்கைப் பேண பொலிசார் உஷார் நிலையில்

ஈ. பீ. ஆர். எல். எப். இயக்கத்தின் போட்டிக் குழுவான இலங்கைத் தமிழ்ப் போராளிகளே திரு. கே. பத்மநாபாவையும் அவரது சகாக்களையும் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக இந்திய உள்துறை செயலாளர் திரு. நாகராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் மாநிலம் முழுதும் காவல் துறையினரை உஷார் நிலையில் வைத்திருப்பதுடன், துப்பாக்கிச் சம்பவத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டவர்களை கைது செய்யும் வகையில் காவல்துறையை சேர்ந்த உயர் தலைவர் ஒருவர் தலைமையில் தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களுக்கு பெருந்தொகையான காவல் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் போராளிகள் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவாமல் இருக்கும் வகையில் உன்னிப்பான கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு கனரயோர காவல் படையினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் எவ்விதமான அசம்பாவிதங்களும் இடம்பெறாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உள்துறை செயலர் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீர் தனிநாட்டு முடிவை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினால் அறிவிக்சப்பட்டுள்ள ''தற்காலிக காஷ்மீர் அரசு'' என்னும் பிரகடனத்தை தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று பாகிஷ்தான் அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை விடயத்தில் பாகிஸ்தான் கொண்டுள்ள இந்த நிலைப்பாடு குறித்தும் முடிவு குறித்தும் இந்தியா தனது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

ஜம்மு - காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் இதுவரை கொண்டிருந்த நிலைப்பாடுகளின் நிமித்தம் இவ்விருநாடுகளிக்குமிடையிலான நட்புறவுகள் பாதிக்கப்பட்டிருந்தமை அறிந்ததே. பாதிக்கப்பட்டிருந்த இந்த நட்புறவுகளை சீராக்கும் வகையில் இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதத்தின் முற்பகுதியில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறான சூழலில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியால் அறிவிக்கப்பட்டுள்ள இந்ததனிஅரசு பிரகடனத்தை பாகிஸ்தான் அங்கீகரிக்கும் பட்சத்தில்இவ்விருநாடுகளுக்குமிடையிலான நட்புறவுக்கான நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

''தற்காலிககாஷ்மீர்அரசு'' பிரகடனத்துக்கு பாகிஸ்தான் பகிரங்கமாகவோ மறைமுகமாகவோ ஆதரவு தெரிவிக்குமாகில் இந்திய பாகிஸ்தான் உறவுகளில் மேலும் விரிசல் ஏற்படலாம் என்று பாகிஸ்தானுக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே. என் டிச்ஸிற் இஸ்லாமாபாத்தில் வைத்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் டாக்டர் தமீர் கானுக்கு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்காலிக காஷ்மீர் அரசு பிரகடனம் பற்றிய பாகிஸ்தானின் முடிவு குறித்து அந்நாட்டு பத்திரிகைகள் வெகுவாக பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் பாகிஸ்தான் இந்நடவடிக்கையை அங்கீகரித்திருக்குமாகில் ஒரேநாட்டுக்குள் இரண்டு அரசுகள் இயங்கும் நிலை தான் உருவாகியிருக்க முடியும் என்றும் கூறியுள்ளன.

## மகளிரின்செயற்திட்டங்களுக்கு ''இபாட்''உதவி வழங்கும்!

(கொழும்புத்துறை)

''உழைக்கும் மகளிர் குழுக்கள் சிறப்பாக இயங்கி வருவது மகிழ்ச்சியளிக்கின்றது. மகளிருக்கான கடன் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், அவர்களின் உழைப்பிற் கேற்ற மேலதிக வருமானம் பெறுவதற்கான முதலீட்டிற்கும்தமது நிறுவனம் உதவிகள் வழங்கும்'' என்று வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவனத் தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்த சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதி (இபாட்)நிறுவனத் தலைமைப் பிரதி நிதி திரு.ஜெரமிவோல் உறுதியளித்தார்.

வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 500 மகளிர் திரு. ஜெரமியுடன் இச்சந்திப்பின்போது உரையாடினர். பனை அபிவிருத்திச் சபைப் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் திரு. வீ. ஜீ. தங்கவேல் திரு. ஜெரமியை வரவேற்று உழைக்கும் மகளிர் நிறுவனம், மகளிர் குழுக்களின் செயற்பாடுகள் பற்றி விளக்கினார்.

அங்கு பாரம்பரிய. சுய தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விதவைகள், வயோதிப மாதர்களுக்குக் கிடைக்கும் வருமானம் போதாது எனத் தெரிவித்த திரு.ஜெரமிவோல் வருவாயை அதிகரிப்பதற்கேற்ற நடவடிக்கைகளுக்கு 'இபாட்' நிறுவனம் உதவிகள் வழங்கும் என்று கூறினார்.

இளம் யுவதிகள் பன்னை வேலையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்ததை அவதானித்த அவர் இவற்றின் மூலம் மகளிரின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்று வினவினார். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் உழைக்கும் மகளிரின் வேலைத்திட்டங்களை ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (24)

## அரசியல் சாதனங்களுடன் வரும் மக்கா யாத்திரிகருக்கு தண்டனை

### சவூதி அரேபியா எச்சரிக்கை

(ரியாட்)

மக்கா நகருக்கு இம்முறை புனித யாத்திரையை மேற்கொள்பவர்கள் தம்முடன் எவ்விதமான அரசியல் சாதனங்களையும் எடுத்துச் செல்லக் கூடாதென்றும்; அப்படி எடுத்துச் செல்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்றும் சவூதி அரேபியா எச்சரிக்கை செய்துள்ளது.

1987ஆம் ஆண்டு மக்கா நகரில் பாரிய குண்டு வெடிப்பு ஏற்பட்டதும், அதனால் பலர் கொல்லப்பட்டதும் அறிந்ததே. இப்படியான ஒரு சம்பவம் மீண்டும் நடைபெறாது பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையே சவூதி அரேபியாவின் இந்த எச்சரிக்கையாகும்.

மக்கா நகருக்குள் எந்த விதமான அரசியல் தத்துவ சாதனங்களையும் கொண்டு வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், இத்தடையை மீறுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்படவுள்ளதுடன் அவர்களது யாத்திரை ரத்துச் செய்யப்பட்டு தத்தமது சொந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பி வைக்கப் படுவார்கள் என்றும் சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

1987இல் இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் பெரும் பகுதியினர் ஈரானியர்களேயாவர். இந்தசம்பவத்தைதொடர்ந்து ஈரானியர்கள் மக்கா யாத்திரையைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைகள் விற்பனை இல்லை

(வவுனியா)

வவுனியாவில் செய்தி பத்திரிகைகள் சஞ்சிகையின் விற்பனையும் நிறுத்தப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் தாக்குதல் சம்பவங்களையடுத்து மேற்படி பத்திரிகை, சஞ்சிகளின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எதுவும் இங்கு விற்பனை செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

பல பத்திரிகைகள் விற்பனை செய்யப்படும் முகவர் நிலையங்கள் பூட்டப்பட்டேகாணப் படுகின்றன.

இதன் காரணமாக வெளி இடங்களில் இடம் பெறும் சம்பவங்களை அறிந்து கொள்ள முடியாமல் மக்கள் கஷ்டமடைகின்றனர். (தி)

## வருடாந்த பொதுக் கூட்டம்

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அருட் சகோதரி எம். எத்தல் வீவா தலைமையில் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும், ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் அருட் சகோதரி மேரி கலீஸ்ரா பிரிவுபசார வைபவம் என்பன சிறப்பாக நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## நயினாதீவு உற்சவம் ரத்து

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் வருடாந்த மகோற்சவம் பின்போடப்பட்டுள்ளது.

20-6-90 இல் நடைபெற்ற அறங்காவலர் சபைக் கூட்டத் தீர்மானப்படி நாளை 23 ஆந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவிருந்த வருடாந்த மகோற்சவம் தற்போது உள்ள நாட்டு நிலைமை காரணமாக காலவரையறையின்றி பின்போடப்பட்டுள்ள தாகவு ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# ரெலோ செல்வமும் மற்றும் பலரும்

# தமிழகத்தில் கைது; அகதிகளுக்கு பாதுகாப்பு!

(சென்னை)

சென்னை கோடம்பாக்கத்தில் ஈ. பி. ஆர். எல். எப். தலைவர் பத்மநாபாவும் சகாக்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் போராளிக் குழுக்களைக் கைதுசெய்வதற்குப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் உட்பட எண்ணூறு பேர் இதுவரை கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

போராளிக்குழுக்களின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. ஆனாலும் ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை.

### 800 பேருக்கு மேல் கைது

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 800 தமிழர்கள் தமிழகம் முழுவதும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சென்னை கோடம்பாக்கம் பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா உட்பட 15 பேர் கொலை செய்யப்பட்டதை அடுத்து மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள தமிழ்ப்போராளிகளின் இருப்பிடங்கள், அலுவலகங்களை பொலிஸார் சோதனையிட்டு அவர்களை கைது செய்துள்ளனர்.

### சென்னையில் 111 பேர் கைது

சூளைமேடு, ஜட்வியா காலனி, கோடம்பாக்கம் வெள்ளாளர் தெரு, சைதாப்பேட்டை சி. ஐ. டி. நகர் மடிப்பாக்கம் சதாசிவம் நகர் ஆகிய இடங்களில் தங்கியிருந்த பல்வேறு போராளிக் குழுக்களைச் சேர்ந்த பலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர பதினொரு பெண்கள், பதினொரு குழந்தைகள் ஆகியோர் பொலிஸாரால் அழைத்து வரப்பட்டதாகவும், பாதுகாப்புக் கருதியே அவர்கள் அழைத்துவரப்பட்டதாகவும் பொலிஸ் கமிஷனர் கூறினார்.

தமிழகத்தில் இதற்கு முன் நடந்திராத வகையில் இடம்பெற்றுள்ள இந்தக் கொலைச் சம்பவம் பற்றி பொதுமக்கள் குறிப்பாக சென்னை வாசிகள் பீதியடைய வேண்டாமெனவும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

### சிறப்புக் காவற்படைப் பிரிவுகள்

சென்னையில் பொலிஸ் பந்தோபஸ்து கூடுதலாக்கப்பட்டதை அடுத்தும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த மூன்று பிரிவுகள் இப்பொழுது சென்னையில் பந்தோபஸ்து படைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் கமிஷனர் கூறினார்.

### ஆயுதங்கள் இல்லை

போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தையும் பொலிஸார் சோதனையிட்டு வருகிறார்கள்.

இதுவரை அந்த இடங்களில் இருந்து ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் தமிழக அரசின் உள்துறை செயலாளர் வத்சனும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

படுகொலைகள் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டதாக நாகராஜன் கூறினார்.

### ஆபத்து நீங்கியது

நடந்த சம்பவங்களில் 15 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

### மனைவிக்கு விசேட பாதுகாப்பு

ஈ. பி. ஆர் எல். எவ்வின் பொதுச் செயலாளர் பத்மநாபாவின் மனைவிக்கு விசேஷபாதுகாப்புகொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே பாதுகாப்புத் தேவைப்படும் அனைவருக்கும் பாதுகாப்புத் தர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் நாகராஜன் கூறினார்.

கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களின் பிரேத பரிசோதனை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. அது முடிந்தவுடன் அவர்களின் உறவினர்களிடம் இந்த சடலங்கள் ஒப்படைக்கப்படும்.

கொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர் மனைவிகள் உறவினர்கள் போன்றோர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும்

விபரமும் விசாரிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு 8.45 மணியளவில் நடைபெற்றதாக கூறப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் ஆயுதங்கள், குண்டுகள் ஆகியனவற்றை பரிசோதனை செய்வதற்காகத் தடய அறிவியல் குழு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் தாக்குதலை நடத்தியவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. ஏனென்றால் அங்கு தங்கியிருந்த ஈ. பி. ஆர். எல் எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### திருச்சியில் 12 பேர் கைது

சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருச்சியில் புதன் அன்று அதிகாலை இலங்கைப் போராளி இயக்கங்களைச் சேர்ந்த சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

### ரெலோ செல்வம் கைது

அதில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த 5 பேரும் அடங்குவர். ரெலோ அமைப்புத் தலைவர் செல்வம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரும், அவரது ஆதரவாளர்களும் திருச்சியில் அவர்கள் தங்கியிருந்த வீட்டில் கைது செய்யப்பட்டனர்.

திருவானைக்காவில் சண்டிகேஸ்வரர் நகர்ப் பகுதியில் உள்ள வீட்டில் ஏழுபேர் கைது செய்யப்பட்டனர். கடந்த வாரம் இதே வீட்டில் 18 பேர் தங்கியிருந்தனர். சென்றபுதன் கிழமையன்று அவர்களில் 15 பேர் கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடுதலை

## இடம் பெயர்ந்த அகதிகளின் அவல நிலைமை

(விசேட நிருபர்)

குருநகர், றெக்கிளமேசன், சின்னக்கடை பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் கொழும்புத்துறை, புனித சூசையப்பர் வித்தியாலயம், சேமாலை ாதா ஆலயம், துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, அரியாலை கிழக்கு தமிழப் பாடசாலை, கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா ஆலயம், பாண்டியன் தாழ்வு சந்தான மாதா கோவில் என்பவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நாவாந்துறை, கொட்டடி, முஸ்லீம் வட்டாரம் பகுதி மக்கள் ஆறுகால்மடம், பொம்மைவெளி, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை மூத்த நயினார் பாடசாலை, உயரப்புலம் அடைக்கலமாதா கோயில் நவாலி சம்பேதுருபாவிலு ஆலயம், மானிப்பாய் அந்தோனியார், சந்தான மாதா ஆலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மற்றும் தனியார் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பாடசாலை, கோவில்கள், வீடுகளில் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## வீடுகள் சேதம்

(விசேடநிருபர்)

நேற்று முன்தினம் (20·6 90) ஷெல்லுக்கு மேலும் சில வீடுகள் சேதத்திற்கு உள்ளாயின.

யாழ். மாட்டின் வீதி, ஜே. ஈ. இராசநாயகம், குருநகர், மவுண்கார்மல் ஒழுங்கை அந்தோனிப்பிள்ளை சிங்ராஜர், பாவுடையார் வீதி றூபட் புதுமைமாதா கோயில்மேற்கு வீதி ஜோர்ஜ் ஹென்றி கொட்டடி வீதி, புலேந்திரன் ஆகியோரது வீடுகள் சேதம் அடைந்தன.

புதுமை மாதா கோயில் மேற்கு வீதி ஜோர்ஜ் ஹென்றி மவுண் கார்மல் ஒழுங்கை அந்தோனிப் பிள்ளை சிங்கராயர் ஆகியோரது வீடுகள் பலத்த சேதத்திற்கு உள்ளாகின.

### முழ்முனை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடங்களும் நொருங்கிக் கிடக்கக் காணப்பட்டன. தெல்லிப்பளை தபால் நிலையத்துக்குப் பின்பக்கமாக அமைந்திருந்த கடை ஒன்றின் மீது விமானத்திலிருந்து குண்டு வீசியதால் கடை இடிந்து முற்றாக சேதமடைந்தது பொருட்கள் யாவும் கருகி பாவனைக்கு எடுக்க முடியாதிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கடைவாயிலில் உயர்ந்து வளர்ந்திருந்த தென்னை மரமும் அப்படியே கருகியுள்ளது குரும்பசிட்டியிலும் தெல்லிப்பளை வடக்கிலும் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டதால் பொதுமக்கள் எவருக்கும் உயிர்ச்சேதமோ காயங்களோ ஏற்படாமல் தப்பிக் கொண்டனர்.

குரும்பசிட்டி வீடு குண்டு வீச்சுக்கு இலக்கானபோது அருகிலிருந்த போராளி ஒருவர் காலில் காயமடைந்தார். அவரை சக போராளி தோளில் சுமந்து சென்று கூப்பிடு தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த தங்கள் வாகனத்தில் ஏற்றி சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்.

### மயிலிட்டிப்பகுதிகளிலும் வீடுகள் சேதம்

காங்கேசன்துறை மயிலிட்டி பகுதிகளில் நேற்று முன்தினம் விமானக்குண்டுவீச்சுக்கு இலக்கான வீடுகளை அவதானித்த போது இவற்றில் அனேகமானவை தரைமட்டமாகி சுற்றிலும் நின்ற மரங்கள் யாவும் கருகி இருந்ததை காணக் கூடியதாய் இருந்தது.

மக்கள் எவருமே இல்லாத இப்பிராந்தியங்களில் விடுதலைப்புலிப் போராளிகள் ஆங்காங்கே அரண்களை அமைத்து

### மன்னாரில்

(1 ஆம் பக்கத் தொடர்க்சி)

## பெற்றோல் குண்டு வீச்சு

மூதூரில் ஐம்பத்திஎட்டாம் கட்டை பாரதிபுரம் என்னும் இடத்தில்ஹெலியிலிருந்நு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் இரண்டு பிள்ளைகள் காயமடைந்தனர். ஹெலிக்கப்டரில் இருந்து பெற்றோல் குண்டு வீசப்பட்டதால் ஒரு வீடு முற்றாக எரிந்து சாம்பரானது.

## வீடுகள் தீக்கிரை

மட்டக்களப்பில் நேற்று மயிலங்கருக்கு என்னுமிடத்தில் எழுபத்தைந்து தமிழரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இங்கு வடிவேலு என்னும் தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## கல்குடாவிலும் வீடுகளுக்குத் தீ

வாழைச்சேனையில் தேவாலயத்தில் இருந்த அகதிமுகாமிற்குள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த இளைஞர்களைப் பிடித்து கொண்டு சென்றுள்ளார்கள் போகும் போது கல்குடாப் பகுதியில் இருந்த வீடுகளை தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

## அகதிமுகாமில் சூட்டு 6 பேர் பலி

காரைதீவு அகதி முகாமில் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினர் பதினைந்து இளைஞர்களைச் சுட்டதில் ஆறுபேர் ஸ்தலத்திலேயே இறந்தனர். 9பேர் படுகாயம் அடைந்தனர்.

### இதனால்தான்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் இங்குவந்தால் இது போன்ற மோதல் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்துத் தான் போராளிகளை வேறு மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டி வந்தது என்றும் அப்போதே சொன்னேன் என்று அவர் நிருபர்களின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது கூறினார்.

பத்மநாபா இங்கு வருவது முன் கூட்டியே தெரிவித்து பாதுகாப்பு தேவை என்று கூறியிருப்பாரேயானால் அவருக்கு தகுந்த பாதுகாப்பு அளித்து அவரை காப்பாற்றி இருக்கலாம். ஆனால் அவர் யாருக்கும் தெரியாமலேயே

### ஏழாலையில்

((1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க. கமலாதேவி வயது 41, க. தயாநந்தினி வயது 16, க. கிருபாகரன் வயது 12, க. விமலராஜினி வயது 10, இ. சச்சியானந்தம் வயது 14, ச. ஜயரூபன் வயது 15 ஆகியோரே இவ்விமானத் தாக்குதலில் காயமடைந்தோராவார்.

மேலும் கோ. நேசராணி என்ற 45 வயது மாது மரணமானார் என்பதும்குறிப்பிடத் தக்கதாகும்.

### பஸ்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்தும், அராலி வட்டுக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளுக்கு ஒட்டுமடச்சந்தியில்இருந்தும் சேவைகள்இயங்

### இடம்பெயர்ந்தோருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

## சென்னையில் 111 பேர் கைது

சூளைமேடு, ஜட்வியா காலனி, கோடம்பாக்கம் வெள்ளாளர் தெரு, சைதாப்பேட்டை சி. ஐ. டி. நகர் மடிப்பாக்கம் சதாசிவம் நகர் ஆகிய இடங்களில் தங்கியிருந்த பல்வேறு போராளிக் குழுக்களைச் சேர்ந்த பலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பஸ்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்தும், அராலி வட்டுக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளுக்கு ஓட்டுமடச்சந்தியில்இருந்தும் சேவைகள்இயங்குகின்றன. டீசல்பற்றாக்குறை காரணமாக இ.போ.ச. பஸ்கள் இயங்குவதில்லை. மினி வான்களும், ஓட்டோக்களும், மட்டுமே தற்காலிக பஸ் நிலையங்களில் தரித்துநிற்கின்றன. (ம)

## ஈரானில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1978ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட மிகமோசமான நில நடுக்கம் இதுவென அறிவிக்கப்படுகின்றது. 1978 இல் ஈரானில் கிழக்கில் ஏற்பட்ட நில அதிர்ச்சியினால் 25000 த்திற்கு மேற்பட்டோர் மரணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிவுகள்

சென்னையில் பொலிஸ் பந்தோபஸ்து கூடுதலாக்கப்பட்டதை அடுத்தும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த மூன்று பிரிவுகள் இப்பொழுது சென்னையில் பந்தோபஸ்து படைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும்பொலிஸ் கமிஷனர் கூறினார்.

## ஆயுதங்கள் இல்லை

போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தையும் பொலிஸார் சோதனையிட்டு வருகிறார்கள்.

இதுவரை அந்த இடங்களில் இருந்து ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் தமிழக அரசின் உள்துறை செயலாளர் நாகராஜன் குறிப்பிட்டார்.

தாக்குதல் நடத்தி விட்டு தப்பியவர்களை விரைவில் கைது செய்துவிடுவோம் என்றும் நாகராஜன் நம்பிக்கை தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் உள்துறை செயலாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் புதன்கிழமை காலையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் டி. ஜி. பி.துரை ஐ ஜி. ராஜ்மோகன் தேவாரம் மாநில ரகசிய இன்ஸ்பெக்டர் ராபுர் அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மத்திய அரசின் ரகசிய புலனாய்வுத்துறை இயக்குநர் ஈ. பி. ஆர் எல். எவ்வின் பொதுச் செயலாளர் பத்மநாபாவின் மனைவிக்கு விசேஷபாதுகாப்புகொடுக்கப்பட்டுள்ளது. இதைப் போலவே பாதுகாப்புத் தேவைப்படும் அனைவருக்கும் பாதுகாப்புத் தர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் நாகராஜன் கூறினார்.

கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களின் பிரேத பரிசோதனை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. அது முடிந்தவுடன் அவர்களின் உறவினர்களிடம் இந்த சடலங்கள் ஒப்படைக்கப்படும்.

கொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர் மனைவிகள் உறவினர்கள் போன்றோர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மாநகரதுணைக்கமிஷனர் ஒப்புக் கொண்டுள்ளார்.

## தாக்கிவிட்டு ஓடினார்களாம்

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றபோது கோடம்பாக்கம் பங்களா சாலையில் இவர்களின் காரை எட்டிப் பார்த்த ஒருவரை தாக்கிவிட்டு ஓடி விட்டதாக கூறப்படும் செய்தி பற்றி உள்துறை செயலாளரிடம் கேட்கப்பட்டது.

அந்த வழியாகச் சென்ற கார் ஓரிடத்தில் நின்றபோது சீருடை அணியாத பொலிஸ்காரர் எட்டிப்பார்த்தார்கள் என்றும் அப்போது காரில் இருந்தவர்கள் தாக்கி விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. அவரை கையால் தாக்கினர் என்று சிலரும், துப்பாக்கியின் பின்பகுதியினால் தாக்கினார்கள் என்று சிலரும் கூறினார்கள் எல்லா அன்று அதிகாலை இலங்கைப் போராளி இயக்கங்களைச் சேர்ந்த சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## ரெலோ செல்வம் கைது

அதில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த 5 பேரும் அடங்குவர். ரெலோ அமைப்புத் தலைவர் செல்வம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரும், அவரது ஆதரவாளர்களும் திருச்சியில் அவர்கள் தங்கியிருந்த வீட்டில் கைது செய்யப்பட்டனர்.

திருவானைக்காவில் சண்டிகேஸ்வரர் நகர்ப் பகுதியில் உள்ள வீட்டில் ஏழுபேர் கைது செய்யப்பட்டனர். கடந்த வாரம் இதே வீட்டில் 18 பேர் தங்கியிருந்தனர். சென்றபுதன் கிழமையன்று அவர்களில் 15 பேர் கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் செவ்வாயன்றிரவு பொலிசார் 7 பேரை மட்டுமே கைது செய்தனர். மிகுதி11 பேரைக்காணவில்லை. ஆனால் கைதுசெய்யப்பட்ட போராளிகளிடம் ஆயுதம் எதுவும் இல்லை.

## அகதி முகாம்களுக்குப் பாதுகாப்பு

சென்னை கொலைச் சம்பவத்தையடுத்து திருச்சி புதுக்கோட்டைச் சாலையில் உள்ள ஏறத்தாழ 20 அகதி முகாம்களில் பந்தோபஸ்துபலப்படுத்தப்பட்டுள்ளது. அகதி முகாமில் தங்கியுள்ளவர்களில் சிலர் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ரெலோ செல்வம், செந்தோழன், குமார், குணம், மாறி, விடுதலைப் புலிகள் ஆனந், சுதா, அன்சார், பரதன், சுந்தர், ஜீவன், அக்கா ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர் காலில் காயமடைந்தார். அவரை சக போராளி தோளில் சுமந்து சென்று கூப்பிடு தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த தங்கள் வாகனத்தில் ஏற்றி சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்.

## மயிலிட்டிப்பகுதிகளிலும் வீடுகள் சேதம்

காங்கேசன்துறை மயிலிட்டி பகுதிகளில் நேற்று முன்தினம் விமானக்குண்டுவீச்சுக்கு இலக்கான வீடுகளை அவதானித்த போது இவற்றில் அனேகமானவை தரைமட்டமாகி சுற்றிலும் நின்ற மரங்கள் யாவும் கருகி இருந்ததை காணக்கூடியதாய் இருந்தது.

மக்கள் எவருமே இல்லாத இப்பிராந்தியங்களில் விடுதலைப்புலிப் போராளிகள் ஆங்காங்கே அரண்களை அமைத்து வானத்தை நோக்கி துப்பாக்கியை ஏந்திய வண்ணம் நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

காங்கேசன்துறை கடற்பரப்பிலிருந்து ஸ்ரீலங்கா யுத்தக்கப்பல் ஊர்மக்களை நோக்கி அடிக்கடி பீரங்கித் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறது. காங்கேசன் துறைமுகத்திலிருந்து சிறிது தூரத்தில் இப் போர்க் கப்பல் நிறுத்தப்பட்டிருப்பதையும் அதற்கு சிறிது தூரம் அப்பால் அண்மையில் இங்குவந்த மாக்கப்பல் நங்கூரமிடப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. கடுமையான பீரங்கித்தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் இடம் பெறுவதால் மா இறக்கும் வேலைகள் எதுவும் இடம் பெறவில்லை.

நேற்று முன்தினம் தொண்டமானாறில் அமைந்திருந்த புலிகளின் காவல் அரண்களை நோக்கி ஹெலிகொப்ரர் சுற்றிச்சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து தொண்டமானாறு, வளலாய், பத்தைமேனி மக்களும் மூட்டை முடிச்சுகளுடன் ஆவரங்கால், புத்தூர் கிராமங்களுக்கு பெயர்ந்து விட்டனர்.

வத்தினர் பதினைந்து இளைஞர்களைச் சுட்டதில் ஆறுபேர் ஸ்தலத்திலேயே இறந்தனர். 9பேர் படுகாயம் அடைந்தனர்.

## இதனால்தான்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் இங்குவந்தால் இது போன்ற மோதல் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்துத் தான் போராளிகளை வேறு மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டி வந்தது என்றும் அப்போதே சொன்னேன் என்று அவர் நிருபர்களின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது கூறினார்.

பத்மநாபா இங்கு வருவது முன் கூட்டியே தெரிவித்து பாதுகாப்பு தேவை என்று கூறியிருப்பாரேயானால் அவருக்கு தகுந்த பாதுகாப்பு அளித்து அவரை காப்பாற்றி இருக்கலாம். ஆனால் அவர் யாருக்கும் தெரியாமலேயே திடீரென்று திங்கள் அன்று சென்னை வந்தார். அதனால் தான் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்கிறது என்றார்.

எந்தப் போராளிக் குழுக்களாக இருந்தாலும் அவர்கள் தங்களுடன் மோதிக்கொள்ளவோ அல்லது தமிழ் நாட்டில் வன்முறைச் செயலில் ஈடுபடவோ மாநில அரசு அனுமதிக்காது என ஏற்கனவே திட்டவட்டமாக கூறியிருப்பதாகவும் கருணாநிதி குறிப்பிட்டார்.

பயிற்சி முகாம் இல்லை என்று சொன்னீர்களே ஆனால் இது போன்ற சம்பங்கள் நடந்துள்ளது என்று நிருபர் கேட்டபோது ''பயிற்சி முகாங்கள் இல்லை என்று தான் கூறினேன் எல்லாப் போராளிக் குழுக்களும் மறைமுகமாகவோ நேரடியாகவே ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை எந்த நேரத்திலும் மறுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ராமநாதபுர மாவட்டத்தில் ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தினர் புதைத்து வைத்திருந்த பயங்கர ஆயுதங்களை சில மாதங்களுக்குமுன்பு பொலிஸார் தோண்டி எடுத்து கைப்பற்றியதையும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிர் இழந்தவர்கள் குடும்பத்திற்கு அரச நிதியில் இருந்து 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்ப நிலைமைக்கு ஏற்றவாறு இந்தத் தொகை பங்கிட்டு தரப்படும் என்றும் அவர் கூறினார்.

## சிற்றூரவை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் யோகி, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் ஆகியோரும், கொடிகாமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. டொமினிக் அவர்களும் கலந்துகொண்டார். (அ)

## ஏழாலையில்

((1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க. கமலாதேவி வயது 41, க. தயாநந்தினி வயது 16, க. கிருபாகரன் வயது 12, க. விமலராஜினி வயது 10, இ. சச்சியானந்தம் வயது 14, ச. ஜயரூபன்வயது15 ஆகியோரே இவ்விமானத் தாக்குதலில் காயமடைந்தோராவார்.

மேலும் கோ. நேசராணி என்ற 45 வயது மாது மரணமானார் என்பதும்குறிப்பிடத்தக்கதாகும்.

## இடம்பெயர்ந்தோருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுக்கு முதல் கட்டமாக ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான இடம்பெயர்ந்தவர்களின் விபரங்களை அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்கள் சேகரிப்பார்கள். (ம)

## இருளுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை தாமே இரவில் போட்டுக் கொள்கின்றனர். இது அவர்களுடைய பாதுகாப்பிற்கே குந்தகம் விளைவிக்கக் கூடியது என யாழ். மாநகர சபைமின்சாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய நகர்ப்பகுதிக்கு அண்டிய பகுதிகளில் பகலில் மட்டும் மின்சாரம் வழங்கப்படும். இப்பகுதிகளுக்கு பாதுகாப்பு முன்னோடி நடவடிக்கைகளாக இன்னும் ஓரிரு நாட்களுக்கு மட்டும் மின்சாரம் இரவில் வழங்கப்படமாட்டாது எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

கோட்டை முகாமிலிருந்து வந்துவிழும் ஷெல் மின் பாய்ந்து கொண்டிருக்கும் கம்பிகளை தாக்கும்போது பெரும் தீவிபத்துகளை ஏற்படுத்தி விடும் என்பதே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவித்துள்ளார். (லோ)

## இடம்மாறிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு தினங்களுக்கு மேலாக குருநகர் புதிய சந்தை (சின்னக்கடை) மூடிக் கிடப்பதுடன் அப்பகுதியில் சனநடமாட்டமும் குடியிருப்புகளும் குறைந்து வெறிச்சோடிக் காணப்படுகிறது, (51)

## திருமலையில் தமிழர்----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் கட்டை என்னும் இடத்தில் முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் ஒரு வீட்டைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர். இதில் ஒரு குழந்தை ஒரு பெண், ஒரு ஆண் ஆகியோர் அடங்குகின்றனர். அதேவேளை கடந்த திங்கட்கிழமை பதின்மூன்றாம் கட்டை இராணுவத்தினர் சுட்டதில் இரு தமிழர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

விளாங்குளம், கப்பல்துறை, கவாத்திக்குடா தொண்ணூற்றிஎட்டாம் கட்டை, தொண்ணூற்றி ஆறாம் கட்டை ஆகிய பகுதியில் உள்ள வீடுகள் யாவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இங்கிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக தம்பலகாமம் கிண்ணியா ஆகிய இடங்களுக்குச் சென்றுள்ளார்கள்.

கடந்த திங்கட்கிழமை சீனன் குடாவில் உள்ள தமிழ்ப் பொதுமக்கள் நாற்பது பேரை இராணுவத்தினர் வெட்டிக் கொன்றுள்ளார்கள், மிகுதித் தமிழ் மக்களைப் பிடித்து வைத்துள்ளார்கள்.

அதேவேளை சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் குச்சவெளியில் இருந்த தமிழ் வீடுகள் அனைத்தும் சேதமாக்கப்பட்டன. இதனால் மக்கள் வெளியேறி அண்டிய கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். ஷெல் தாக்குதலினால் பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை மூன்றாம் கட்டை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் சண்டை சில நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது,

## 120 பேர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை விட அதிகமென்றும் அதில் பெரும் பகுதியினர் சிங்கள இராணுவத்தினாலும், காடையர்களினாலும் கொல்லப்பட்டவர்கள் எனவும் அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

## செஞ்சிலுவைச் சங்கம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யளவு மருந்துப்பொருட்கள் கையிருப்பில் இல்லாததினால் தேவையான மருந்துப் பொருட்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படி தமது நிறுவனத்திடம் கேட்டுள்ளார்கள். (ம

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராஜா

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளர்)

வட்டுக்கோட்டை துணைவியை பிறப்பிடமாகவும் தாவடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா அவர்கள் 21-06-90இல் காலமானார்.

இவர் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், மனோகரி, நவீனராஜ் (கனடா), நகுலராஜ் (வீடமைப்புத் திணைக்களம் வவுனியா, செஞ்சிலுவைச் சங்க நிர்வாகசபை உறுப்பினர், சென்ஜோன் அம்புலன்ஸ் Corp. Supdt. Jaffna), நந்தராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், றமனா (பொறியியலாளர், கனடா)வின் அன்பு மாமனாரும், துஸ்யந்தியின் பேரனுமாவார்,

திருச்செல்வநாயகி (U K.), மயில்வாகனம் ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மநாதன் துரைராஜ், செல்வத்துரை (அரசாங்க ஒப்பந்தக்காரர்) நாகரத்தினம், சிவஞானம் (U. K,) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக இன்று (22-06-90) வெள்ளிக்கிழமை 10 மணிக்கு தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நகுலன்

R/374

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.